செ.வெ.எண்:35 நாள்:20.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

1959-ம் வருடத்திய தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் விதி எண்.12(2)-ன்படி அரியலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர் நிலைகளான ஏரி மற்றும் குளம் ஆகியவற்றிலிருந்து வண்டல் மண் / சவுடு மண் போன்ற கனிமங்களை உண்மையான வீட்டுப்பயன் அல்லது வேளாண் நோக்கத்திற்காக 30 கனமீட்டர் அல்லது 10 டிராக்டர் லோடு இலவசமாக எடுத்துச்செல்ல அனுமதி வழங்குவது தொடர்பாக அரியலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்-1,2,3 மற்றும் 4 நாள்.15.02.2017-ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் தங்களது விவசாய நிலத்திற்கு வண்டல் மண் தேவைப்படும் பட்சத்தில் தங்களுக்கு சொந்தமான பட்டா நிலத்திற்குரிய கணினி சிட்டா நகலுடன் குடும்ப அட்டை நகல் அல்லது ஆதார் அட்டை நகல் அல்லது வாக்காளர் அடையாள அட்டை நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை இணைத்து அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், முதல் தளம், அறை எண்.121-ல் உள்ள துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, அரியலூர் அவர்கள் அலுவலகத்தில் மனு செய்துகொள்ளும்பட்சத்தில் 1959-ம் வருடத்திய தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளுக்கு உட்பட்டு 30 கன மீட்டர் அல்லது 10 டிராக்டர் லோடு வண்டல் மண் உண்மையான வீட்டுப்பயன்பாடு மற்றும் விவசாயப்பணிகளுக்கு எடுத்துக்கொள்ள உரிய அனுமதி வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.